# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.

## அ.சா.9 (LW14 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | வேலு | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | சுப்பன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **12.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது குரும்பபட்டியில் இறந்து போன சென்ராயன் வீட்டிற்கு எதிர் வீட்டில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2ஆம் கையொப்பம் என்னுடையது தான். சுமார் 3 ஆண்டுகளுக்க முன்பு சென்ராயன் இறந்து போனது தொடர்பாக அவரது வீட்டில் போலீசார் விசாரித்து கொண்டிருந்த போது நானும் கைலங்கிரி வாசகம் என்பவரும் நின்று கொண்டிருந்தோம். அப்போது போலீசார் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் நானும் மேற்படி கைலங்கிரி வாசகமும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2ஆக ஏற்கெனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறந்து போன சென்ராயன் வீட்டிற்கு முன்பு நிலக்கோட்டைக்கு போகும் அகலமான ரோடு உள்ளது. சென்ராயன் வீட்டிற்கு எதிரே தான் தண்ணீர் குழாய் மற்றும் தெரு விளக்கு உள்ளது என்றால் சரிதான். நான் சென்ராயன் வீட்டிற்கு எதிர்வீட்டில் தான் குடியிருக்கிறேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். பார்வை மகஜரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. போலீசார் சுமார் 7.30 மணியளவில் சம்பவ இடத்தில் வைத்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். மேற்படி பார்வை மகஜர் மற்றும் வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை போலீசார் பார்வையிடவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்த ஆவணத்தில் நான் கையொப்பம்

செய்தேன் என்றால் சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.12 17:00:14 +0530

Additional District Judge,

Dindigul.